


# அவரை அறிவியுங்கள்

பாடம் 12 ஜூன் 20, 2026



"இளைப்படைந்தவனுக்கு
சமயத்திற்கேற்ற வார்த்தை
சொல்ல நான் அறியும்படிக்கு,
கர்த்தராகிய ஆண்டவர்
எனக்குக் கல்விமானின்
நாவைத் தந்தருளினார்;
காலைதோறும் என்னை
எழுப்புகிறார்;
கற்றுக்கொள்ளுகிறவர்களைப்
போல, நான் கேட்கும்படி
என்செவியைக்
கவனிக்கச்செய்கிறார்.."
(ஏசாயா 50:4)

ஆயிரக்கணக்கானோருக்கு இயேசுவைப் பற்றி உண்மையாகவே தெரியாது. நாம் அவர்களை "வழி தவறிய ஆடுகள்" என்று அழைக்கிறோம், ஆனால் தாங்கள் வழிதவறிவிட்டோம் என்பதுகூட அவர்களுக்கு தெரியாது. அப்படியிருக்க, யாருமே அவர்களுக்கு விளக்கி கூறாவிட்டால், தங்களுக்கு இயேசு தேவை என்பதை அவர்கள் எப்படி அறிந்துகொள்வார்கள்?



இந்த கிரகத்தின் ஒவ்வொரு நபரையும் தேவன் கவனித்துக்கொள்கிறார் மற்றும் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1 தீமோ. 2:4). அவரை அறியாதவர்களும், அவரை அறிந்திருந்தும் அவருடைய வழிகளை விட்டு விலகி சென்றவர்களும் இதில் அடங்குவர்.

அந்த மக்கள் அனைவரையும் சென்றடைய தேவன் யாரை தேர்ந்தெடுத்துள்ளார்? நம் மூலமாகவே. இதுவே நமது "மகா பெரிய பொறுப்பு" ஆகும்.





**என்ன அறிவிக்க வேண்டும்?**

- மகா பெரிய பொறுப்பு

**எப்படி நாம் அறிவிக்க வேண்டும்?**

- இயேசுவை பின்பற்றுதல்
- நட்பை வளர்த்தல்

**வழிதவறியவர்களை மீண்டும் எப்படி அழைத்து வருவது?**

- தேவன் தம் பிள்ளைகள் தேடுகிறார்
- வழிதவறியவர்களை நாமும் தேடுகிறோம்

# என்ன அறிவிக்க வேண்டும்?



# மகா பெரிய பொறுப்பு


"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து," (மத்தேயு 28:19)




"புறப்பட்டுப்போய்,... சகல ஜாதிகளையும்" இயேசுவின் உயிர்தெழுதலுக்கு பின், தம்மை பார்க்க கூடியிருந்த ஜனங்களிடம் அவர் கொடுத்த கட்டளை (மத். 28:18-19மு).

அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் போய் சீஷர்களாக்க வேண்டும். அதாவது, ஜனங்களை தொடர்பு கொண்டு, ஞானமுழுக்கு கொடுக்க வேண்டும், இயேசுவின் சீஷர்களாவதற்கு அவர்களுக்கு போதிக்க வேண்டும் (மத். 28:19-20).

அந்த சீஷர்கள், பதிலுக்கு, மற்றவர்களை சீஷர்களாக்க போதிப்பார்கள்... இப்படியாக இந்த இரண்டாயிரம் வருடங்கள்... மற்றும் கர்த்தருடைய நாள் வரை. இப்பொழுது, இயேசுவின் கட்டளையை நாம் பெற்றிருக்கிறோம்.






பேதுரு மற்றும் யோவானைப் போல, "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே" (அப் 4:20). நாம், பிரசங்க பீடத்திலிருந்து பேசலாம், தெரு பிரசங்கம் செய்யலாம், நம்முடைய சாட்சியை சமுக வலைதளங்களில் பகிரலாம், அல்லது எளிதாக மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளலாம். எப்படியாகிலும் நாம் சொல்ல வேண்டும்.


# எப்படி நாம் அறிவிக்க வேண்டும்?

# இயேசுவை பின்பற்றுதல்

"கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க," (2 கொரிந்தியர் 5:14மு)

**"காணாமல் போன ஆட்டை" கண்டுபிடிக்க இயேசுவை தூண்டியது எது (மத். 15:24)?**

சந்தேகமின்றி, நமக்கான அவருடைய அன்பே (மத். 9:36; எபே. 5:2). அவர் தன்னுடைய அன்பை நமக்குள் வைத்திருக்கிறார், ஆகவே அதைக்கொண்டு இயேசுவை அறியாதவர்களுக்கு அவரை நாம் பகிர வேண்டும். சில நேரங்களில், ஜனங்கள் தங்கள் சொந்த நலனுக்காக இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி நிர்பந்திப்பார்கள். ஆனால் அது தேவன் தெரிந்துகொண்ட முறை அல்ல.








ஆதாம் ஏவாள் பாவம் செய்யாமலிருக்கும்படி தேவன் அவர்களை கட்டயப்படுத்தவில்லை. நோவா காலத்தில் இருந்தவர்களையும் பேழைக்குள் பிரவேசிக்கும்படி தேவன் அவர்களை கட்டாயப்படுத்தவில்லை. அவரை ஏற்றுக்கொள்ளும்படி தேவன் நினிவே ஜனங்களையும் கட்டாயப்படுத்தவில்லை. தங்களுடைய சொந்த பாதைகளை பின்பற்றுவதால் ஏற்படும் விளைவுகளை அவர்களுக்கு அன்போடு தேவன் எச்சரித்தார்.

இயேசுவை பின்பற்றுவதால், நாம் மற்றவர்களுக்கு அவருடைய அன்பை காட்டுகிறோம், அவரை பின்பற்றும்படி அவர்களை அழைக்கிறோம்.

# நட்பை வளர்த்தல்

"...உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்." (1 பேதுரு 3:15)

நாமெல்லாரும் இயேசுவின் பிரசங்கிகள், அதற்கு நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் (1 பேதுரு 3:15). ஆனால் நம்மெல்லாருக்குமே பிரசங்கம் பண்ண தெரியாது. என்றாலும், நாம் பிரசங்கம் பண்ண தேவையான வார்த்தைகளை தருவதாக தேவன் வாக்களித்திருக்கிறார்(ஏசாயா 50:4).





மற்றவர்களுக்கு இயேசுவை எப்படியாகிலும் பகிர்ந்துகொள்வதற்கு நம் மனதில் வைத்துக் கொள்ளக்கூடிய எளிதான குறிப்புகளை பார்க்கலாம்:



யாராகிலும் ஒருவரை அறிந்து, அவர்களிடம் நட்பு பாராட்ட வேண்டும்



அவர்கள் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யும்படி ஜெபிக்க வேண்டும். அவர்களோடு உரையாடுவதற்கு சரியான தருணங்களுக்காக ஜெபிக்க வேண்டும்



நம் சொந்த சாட்சிகளை சொல்வதற்கோ அல்லது அவர்களுக்காக ஜெபிக்கவோ இயற்கையான வழிகளை தேட வேண்டும்



சபையிலுள்ள மற்றவர்களும் அந்த புதிய நண்பருடன் தொடர்பு கொள்ள வழிகளை உருவாக்க வேண்டும்



அந்த புதிய நண்பரின் தேவைகளுக்காவோ அல்லது அவர்களின் கேள்விகளுக்காகவோ ஜெபிக்க வேண்டும்



வேதாகமம் அளிக்கக்கூடிய நம் வாழ்க்கைகான வழிமுறைகள், அறிவுரைகள் மற்றும் ஆறுதல்களை காட்டுவதற்கான வாய்ப்புகளை நோக்க வேண்டும்



ஒரு நேரம் வரும் அப்போழுது உங்கள் நண்பர் உங்களோடு சேர்ந்து வேதாகமம் படிக்க விரும்புகிறாரா என்று கேட்க வேண்டும். பின்னர், உங்கள் நண்பர் ஞானமுழுக்கு எடுக்க விரும்புவார்

# வழிதவறியவர்களை மீண்டும் எப்படி அழைத்துவருவது?

# தேவன் தம் பிள்ளைகளை தேடுகிறார்

"எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (Jeremiah 31:20)



ஒரு குறிப்பிட்ட தருணத்தில், தேவனுடைய ஜனங்கள் பிரிந்து போகிறார்கள்: எப்பிராயீம் (வடக்கு இராஜ்யம்) தேவனை கைவிட்டவர்கள்; யூதேயா (தெற்கு இராஜ்யம்) உண்மையாயிருந்தவர்கள்.



அவர்கள் கைவிட்டாலும், தேவன் தம் சொந்த மகனைப் போல அவர்களை நேசிக்கிறார் (எரே. 31:20). அவர்களுடைய பாட்டியாகிய, ராகேல், தங்கள் பாவங்களுக்காக செத்த தன் பிள்ளைகளுக்காக அழுகிறது போல, தாமும் இருப்பதாக கூறுகிறார் (எரே. 31:15).

தேவனை சேவித்து பின் அவரை கைவிட்டவர்களை, தேவன் அன்போடு அழைக்கிறார். அவர்கள் அவருடைய பிள்ளைகள், அவர்களை அவர் நேசிக்கிறார், அவர்கள் அவரிடத்தில் திரும்பும்படி தொடர்ச்சியாக அழைக்கிறார்.



சில நேரம் நம் சொந்த பிள்ளைகள், விசுவாசத்தை அறிந்தவர்கள், அதை கைவிட்டிருப்பார்கள். அவர்களுக்கு நம் முதுகை காட்டுவதற்கு பதிலாக, நாம் அவர்களோடு தொடர்ச்சியாக அன்புகூர்ந்து, அவர்களோடு கனிவாக பேச வேண்டும். அவர்களே தம்முடைய கனிவான இரக்கத்தின் பொருள் என்றும், அவர்கள் தம்மிடம் திரும்பும்படி தாம் ஆவலோடு வாஞ்சிப்பதாகவும் அவர் நமக்கு நினைவூட்டுகிறார்.

# வழிதவறியவர்களை நாமும் தேடுகிறோம்

"நான் அவர்களை ஜனங்களுக்குள்ளே இறைத்தபின்பு, அவர்கள் தூரதேசங்களிலே என்னை நினைத்து தங்கள் பிள்ளைகளோடுங்கூடப் பிழைத்துத் திரும்புவார்கள்." (சகரியா 10:9)





நம் மனைவி; நம் மகன்; நம் மகள்; நம் நண்பர்; நம் அயலகத்தார்; ஆலய இருக்கையில் அமரக்கூடிய சகோதரன் அல்லது சகோதரி... முன்பொரு நாள் நம்மோடுகூட அவர்கள் தேவனை ஆராதித்திருப்பார்கள், ஆனால் இப்போது, அவர்கள் எங்கே?

மக்கள் ஆலயத்தை விட்டு செல்வதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. நாம் அவர்களுடைய காரணங்களை நியாயந்தீர்க்கவோ, அவர்களுடைய நோக்கங்களை குறை சொல்லவோ, அல்லது அவர்களை மறக்கவோ அழைக்கப்படவில்லை.

அவர்களை கண்டறிந்து அவர்களை திரும்ப கொண்டு வருவதே நம் கடமை. எவ்வாறு நாம் அதை செய்வது? முதலாவது, ஜெபித்தல். இரண்டாவது, அவர்களோடு அன்பு மற்றும் கனிவின் உதாரணமாய் இருத்தல்.

உங்கள் வாழ்க்கை சாட்சி, உங்கள் செயல்கள், வார்த்தைகள், மற்றும் ஜெபங்கள் தேவனை விட்டு விலகிய யாரோ ஒருவருடைய வாழ்வையும் எதிர்காலத்தையும் மாற்றும்.

